# ● கொழும்பில் இன்று அரசு எதிர்ப்பு பேரணி

யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 7 இதழ் 8
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18 — 02 — 1993

## பத்திரிகையாளர் நடத்துவர்

(கொழும்பு)
அரசு, பத்திரிகைகள் மீது மேற்கொண்டுள்ள அடக்கு முறைகளையும், அச்சுறுத்தல் களையும் கண்டித்து பத்திரிகையாளர்கள் இன்று கொழும்பில் பிரமாண்டமான எதிர்ப்பு (4-ம் பக்கம் பார்க்க)

## இரணைதீவுக் கடலில் நால்வரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)
இரணைதீவுக் கடலில் நேற்று முன்தினமும், அதற்கு முதல் தினங்களிலும் படகுகளில் வந்தவர்களில் நான்கிற்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லையென தெரிவிக்கப்பட் (4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலிப் பாதை பற்றி அரச அதிபர் பேசுவார்

(திருநெல்வேலி)
கிளாலியூடாக பொதுமக்கள் பயணம் செய்வதற்கு அனுமதிப்பது குறித்து இன்று கொழும்பு செல்லும் அரச (4ம் பக்கம் பார்க்க)

## ★ புலிகள் பங்குபற்றுவதன் மூலம்

# இனப் பிரச்சினையைத் தீர்க்க பிரேமா புதிய நிபந்தனை விதிப்பு

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் தமது தீவிரப்போக்கை கைவிடுவதாக பிரகடனம் செய்து அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்த முன்வர வேண்டும். இதன் மூலமே இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணக்கூடியதாக இருக்குமென ஜனாதிபதி பிரேமதாஸா புதிய நிபந்தனை விதித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யோசப்பிடம் அவர் இவ்வாறு தம்மை சந்தித்த மன்னார் தெரிவித்தார். ஜனாதிபதி ஆயர் வண இராயப்பு மேலும் கூறுகையில்:

அனைத்து கட்சிகளினதும் ஆதரவு இருந்தால் மட்டுமே நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண முடியும். இதனை உணர்ந்து புலிகள் அரசியல் தீர்வைக் காண தமது தீவிரவாத நடவடிக்கையை கைவிடுவதாக பிரகடனம் செய்து பேச்சுவார்த்தைக்குவந்தால்மட்டுமேகூடிய (4-ம் பக்கம் பார்க்க)

## ★ இலங்கைப் படைகள் கைதிகள் மீது சித்திரவதை

(லண்டன்)
இலங்கையின் இராணுவத்தினரும் பொலிஸாரும் சிறைகளிலுள்ள கைதிகளை சித்திரவதை செய்து வருவதாக லண்டனில் தலைமையகத்தைக் கொண்டுள்ள சர்வதேச மன் (4-ம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களுக்கு விஷேட முற்பணம் ரூபா 1000ஆக அதிகரிப்பு

(மானிப்பாய்)
பாடசாலை மாணவரின் கொப்பி புத்தகம் வாங்குவதற்கென அரச ஊழியர்களுக்கு வருடாவருடம் வழங்கப்படும் விசேட முற்பணம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இப்பணம் முன்னர் 500ரூபாவாகவே இருந்தது. ஊழியர்கள் இதனை ஜனவரி முதல் பெப்ரவரி 28ம் திகதி வரை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான சுற்றுநிருபம் யாழ்ப்பாணம் தபால் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [71-இ]

## பிரேமாவை பிக்குகள் பகிஷ்கரிக்க வேண்டும்

(கொழும்பு)
ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா காலி மாவட்டத்துக்கு வருகைதரும் அனைத்து வைபவங்களையும் பௌத்தபிக்குகள் பகிஷ்கரிக்கவேண்டும் என்று காலிமாவட்ட சங்க சபா சம் [4-ம் பக்கம் பார்க்க]

## மணலாறு காட்டுப் பகுதியில் ‘ஒபரேஷன் வனவெற்றி’ ஆரம்பம்

(கொழும்பு)
மணலாறு மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பாரிய இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கூட்டுப்படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கைக்கு ‘ஒபரேஷன் வனவெற்றி’ என்று பெயரிடப்பட்டுள்ளது, ஆங்காங்கே சிறுசிறு தாக்குதல்கள் இடம்பெற்றதென்றும், இதனால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லையென்றும் கூட்டுப்படைத் (4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக அரசை கலைக்க கோரிக்கை

(சென்னை)
தமிழக சட்டப்பேரவையை கலைக்குமாறு தமிழக எதிர்க்கட்சித்தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் இந்தியப்பிரதமர் திரு நரசிம்மராவை கேட்டுள்ளதாக தமிழக பத்திரிகைகள் (4ம் பக்கம் பார்க்க)

## டிக்ஷித் - திலகரட்ண டில்லியில் சந்திப்பு

(புதுடில்லி)
இந்திய வெளிவிறவுச் செயலர் திரு. ஜே. என். டிக்ஷித்துடன் இலங்கை வெளியுறவுச் செயலர் திரு. பேர்னட் திலகரட்ண நேற்று முன்தினம் புதுடில்லியில் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தினர்.

இலங்கைப் பிரச்னை மற்றும் இருதரப்பு உறவுகள் பற்றியும் சார்க் உச்சிமாநாடு குறித்தும் இவர்கள் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர்.

அண்மைக்காலமாக இலங்கை இந்திய உறவில் நல்ல விளைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## ரூபா $2\frac{1}{2}$ கோடி பெறுமதியான உணவு பொருட்கள் வருகிறது

(கொழும்பு)
வடபகுதிக்கு இரண்டுகோடி ஐம்பது லட்சம் பெறுமதியான அரிசி, மா, சீனி போன்றஉணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்புஅமைச்சு அறிவித்துள்ளது.

இப்பொருட்கள் வடபகுதியில் உள்ள அகதிகளுக்கு நிவாரணம் கொடுப்பதற்கும் தீவுப்பகுதிக்கு அனுப்புவதற்கும் மிகுதிப் பொருட்கள் சகாய விலையில் கொடுப்பதற்கும் ஏற்பாடாகியுள்ளதாம்.

வடக்கே அனுப்பப்படும் உணவுப் பொருட்களின் அளவு 4-ம் பக்கம் பார்க்க)

## ★ உணவுப் பொருள் கொண்டுவர யாழ்-காங்கேசன்பாதையில் கண்ணிவெடி அகற்றப்படுகிறது

(கொழும்பு)
யாழ் குடாவினுள் உணவுப் பொருட்களை கொண்டுசெல்வதற்காக யாழ்-காங்கேசன் துறைப் பாதையிலுள்ள கண்ணி வெடிகளை படையினர் அகற்றி வருவதாக கூட்டுப்படைத் தலைமை தளபதி ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்தவாரம் நடைபெற்ற உயர்மட்ட மாநாடொன்றில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் (4-ம் பக்கம் பார்க்க)

## சண். செயலகம் முன் மறியல் போர்

(மானிப்பாய்)
பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த 7-ம் வட்டார மக்கள் தமக்கு நிவாரணம் தருமாறு கோரி சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் முன்பாக நேற்று 17-ம் திகதி மறியல் போராட்டம் செய்தனர். (3-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கல் தேக்கு விதை

கல் தேக்கு விதை நாற்று இடுவதற்குத் தேவை.— மிக்கவைற். (எ-2887)

### ஒலிவ் ஸ்நானப் பவுடர்

சீயக்காய், வெற்தயம். பயறு, அரப்பு, எலுமிச்சம் கோது, சீரகம் மற்றும் இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயாரித்தது. எண்ணெய் முழுக்குக்கு இசைந்த இயற்கை சாதனம். பக்கற் விலை ரூபா 3/- மட்டுமே அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது. —மிக்கவைற். (எ-2886)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7180)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: சனி, ஞாயிறு காலை 8-00 — 10-00மணி 204, மானிப்பாய்றோட், ஒட்டுமடம். யாழ்ப்பாணம். (எ-7235)

### தேவை

ஜாம்போத்தல்கள், பியர் போத்தல்கள், கோடியல் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும் சுரபி பழரசத்தொழிற்சாலை, கோப்பாய். —சி 7241

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை

கிழக்கு இலங்கை
பல்கலைக்கழகம்

### விரிவுரைகள்

கிழக்கு இலங்கை பல்கலைக்கழக பதிவாளரினால் அனுப்பப்பட்ட செய்தியில் அப்பல்கலைக்கழக விரிவுரைகள் இம்மாதம் 15-02-1993 ஆம் திகதி ஆரம்பமாகின்றன எனவும், விரிவுரைகளுக்கு சமூகம் அளிப்பதற்தாக மாணவர்களை பிறப்புச்சான்றிதழ் கல்விச்சான்றிதழ், (மூலப்பிரதிகள்) மற்றும் ஆவணங்களுடன் உடனடியாக கிழக்கு இலங்கை பல்கலைக்கழகத்தில் சமூகமளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவர்களின் பெயர்ப் பட்டியல், பரீட்சைகளை, யாழ். பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது. தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

பதிவாளர்
(எ-2891)

# சக்திமா

## நீரழிவு நோயாளர்களுக்கென

விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது.


இதில்
குரக்கன் மா, கோதுமை மா,
ஆட்டாமா, அரிசிமா
போன்ற மாவுகளின் கலவை சேர்க்கப்பட்டுள்ளது.
இதை அவித்து பிட்டு, இடியப்பம் செய்யலாம்.
இது சத்துணவும் சம உணவுமாகும்.

இது ஓர் அண்ணா தயாரிப்பு.
அண்ணா கோப்பி கடைகளில்
பெற்றுக்கொள்ளலாம்.

## அண்ணா
## தொழிற்சாலை
இணுவில்.

(எ-2893)

## 31-ம் நாள்
# நினைவஞ்சலி



## அமரர் இ. ச. பேரம்பலம்

(உரிமையாளர்: இ. ச. பேரம்பலம் அன்கோ,
50 கஸ்தூரியார் வீதி)

மண்ணில்: 26-04-1926
விண்ணில்: 19-01-1993

எமது குடாநாட்டில் வர்த்தகதுறையில் பலகாலமாக முன்னணியில் பிரபலிக்கமாக விளங்கி வந்த வர்த்தகர்களுள் அமரர் இ. ச. பேரம்பலம் அவர்கள் அத்துறையில் மிக முன்னணியில் மிளின்று வந்தவர்.

அன்னார் தனது பிறப்பிடமாகிய காரைநகர் வாரிவளவு எனப்படும் இடத்திற்கு எடுத்துக்காட்டாக பல பொது சமய சமூகப் பணிகளுக்கு வாரி வழங்கி வந்த பாரியென வாழ்ந்து வந்தார்.

எமது வர்த்தகர் சங்கத்தின் ஆரம்பகாலம் தொட்டு அங்கத்தவராக இருந்து சங்க நலன் பொதுப்பணிகளுக்காக தாராளமாக மனமுவந்து பங்காற்றி வந்துள்ளார்.

யாழ். வர்த்தகர் சங்கம் சார்பில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கிறோம்.

**யாழ். வர்த்தகர் சங்கம்**
21, மேல்மாடி நவீனசந்தை,
யாழ்ப்பாணம்,

(சி-7236)

## சிவராத்திரி விழா

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை அருள்மிகு ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் ஆலய மகாசிவராத்திரி விழா நாளை 19ம்திகதிவெள்ளிக்கிழமை இரவு நடைபெறும். -154

0 0

(உடுவில்)
இணுவில் கோண்டாவில் காரைக்கால் அருள்மிகு விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமிகோவிலில் சிவராத்திரி விழா நாளை நடைபெறும்மாலை ஐந்து மணிக்கு அபிஷேகஆராதனைகளுடன் ஆரம்பமாகி நான்கு சாமபூசைகளும் நடைபெறும். -109

0 0

(யாழ்ப்பாணம்)
நீராவியடி ஸ்ரீஜெயவீரகத்தி விநாயகர் ஆலய மகாசிவராத்திரி விழா நாளை நடைபெறவுள்ளது. நான்கு சாம பூசைகளும் பக்திப்பாடல்கள், சிறப்புச் சொற்பொழிவுகள், சங்கீதக் கச்சேரி, வில்லுப் பாட்டு, மேளக்கச்சேரியும் இடம் பெறும். (இ)

0 0 0

(யாழ்ப்பாணம்)
ஊரெழு-சாந்திபுரம் சிவபூரணி காளியம்மன் தேவஸ்தானத்தில் சிவராத்திரி விழாவை சிவபூரணிமுத்தமிழ் மன்ற அறநெறிக் கல்லூரி கொண்டாடவுள்ளது. அன்றையதினம் நான்கு சாம பூஜை இடைவெளிகளுக்கிடையில் நாடகங்கள், நடனம், இசைக் கச்சேரியும் இடம் பெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)
கொக்குவில்ஸ்ரீசாயிதுர்க்கா தேவி ஆலயத்தில் சிவராத்திரி விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நான்கு ஜாம விசேடபூசைகளைத் தொடர்ந்து நாதஸ்வரக் கச்சேரியும், இன்னிசைக் கச்சேரியும், வயலின் சோலோ கச்சேரியும் இடம் பெறும்.

வண்ணை - சாந்தயர்மடம்

## ஸ்ரீ கற்பகவிநாயர் கோவில்
## சைவ சமய
## அபிவிருத்திக் கழகம்

★ மேற்படி எமது கழகத்தினால் 07-02-1993 ஞாயிறு அன்று நடாத்தப்பட்ட சைவசமய அறிவுப்பரீட்சையின் பெறுபேறுகளை ஆலய வாயிலில் பார்வையிடலாம்.

★ பரிசளிப்பு வைபவம் 19-02-1993 வெள்ளிக்கிழமை சிவராத்திரி அன்று இரவு 7 மணிக்கு நடைபெறும்.

சைவசமய அபிவிருத்திக்கழகம்
(சி 7240)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை தலைமையலுவலகம்

## ஊர்காவற்றுறைப் பிரிவுக் குழு
## உறுப்பினர் தெரிவுக்கான
## விசேட பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் எதிர்வரும் 14-03-93 முற்பகல் 10-00 மணிக்கு யாழ். கிளைத் தலைமையகத்தில் நடைபெறும்.

நியமனப் பத்திரங்களை 03-03-93 தொடக்கம் கிளையில் பெற்றுக் கொள்ளலாம். 06-03-93 முற்பகல் 9-00மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணி வரை நியமனப் பத்திரங்கள் கிளையில் ஏற்றுக் கொள்ளப்படும். 08-03-93 முற்பகல் 9.00 மணி வரை நியமனப் பத்திரங்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளலாம்.

09-11-92 வரை அங்கத்துவப் பணம் கிளையில் செலுத்தியோர் மாத்திரமே மேற்படி தெரிவிலும் கூட்டத்திலும் பங்கு பற்றத் தகுதியுடையோராவர்.

கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம.
16-02-1993.

(எ 2890)

## 31ம் நாள் நினைவஞ்சலி

## இராமு சண்முகம் பேரம்பலம்

(உரிமையாளர் E. S. பேரம்பலம் அன் கோ.)

அவர்களின் மறைவு குறித்து எங்கள் நினைவஞ்சலியை தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மாசாந்தி அடைய நாம் எல்லோரும் இறைவனை பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி

நிர்வாகம்
வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம்
தலைமை செயலகம்,
237, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(எ 2892)

சுதந்திரக்கட்சிக்குள் தொடர்ந்து தகராறு:

# தலைவி சிறிமாவிற்கு எதிராக 40 எம்.பிக்கள் குற்றப்பிரேரணை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் தகராறு அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

இடதுசாரிக்கட்சிகளுடன் கூட்டு சேர்வது தொடர்பாக திருமதி சிறிமா மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கு கட்சியின் பல உறுப்பினர்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக திரு. அனுரா பண்டாரநாயக்கா சகல கட்சி எம். பிகளுக்கும் அமைப்பாளர்களுக்கும் கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்றக்குழு அடுத்தவாரம் கூடும்போது இவ்விடயம் தொடர்பாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவில் அனுரா பண்டாரநாயக்காவிற்கு அதிக ஆதரவு இருப்பதாகக் கூறப்படுகிறது.

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மாகாண சபைத் தேர்தலை கருத்தில் கொண்டு இடதுசாரிக்கட்சிகளுடன் கூட்டுச்சேர நடவடிக்கை எடுத்து வருகிறார். இதனால் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மீது குற்றச்சாட்டு பிரேரணை ஒன்று இக்கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

இக்குற்றச்சாட்டுப் பிரேரணையில் 40 எம். பிக்கள் கைச்சாத்திட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வீ)

யாழ். ஆயருக்கு

# ஹமில்டன் கடிதம்

(கொழும்பு)

யாழ். ஆயர் வண தோமஸ் சௌந்தரநாயகத்திற்கு கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வனசிங்க பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

வடபகுதியின் தற்போதைய நிலைகுறித்து யாழ். ஆயர் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் உட்பட முக்கிய பதவி வகிப்போருக்கு மகஜர் ஒன்று அனுப்பியிருந்தார். -தி

# தமிழ் பொலிஸ்

## வன்னியில் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா நீதிமன்றவளவில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ரவீந்திரன் (32வயது) கடந்த வியாழன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலைப்பட்டார்.

இவரிடமிருந்த துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளதாம். இவர் காரைநகரைச் சேர்ந்தவர்.

இக்கொலை குறித்து மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். -சி

## அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 13வது இசைவிழா

-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்

**10-ம் நாள் 18–2–93 வியாழன்**

நல்லூர் பல. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில்

**மாலை 4 00 — 5-00 மங்கள இசை**

நாதஸ்வரம்:
என். கோவிந்தராஜன், ரி. செல்வக்குமார்

தவில்:
ஏ. மீனாட்சிசுந்தரம், எஸ். தட்சணாமூர்த்தி,
எஸ். விஜயகுமார், எஸ். சதீஸ்குமார்

**5-00 — 5-15 வீணை**

எஸ். லுசாந்தி, எஸ். சர்வலோகநாயகி,
எஸ். லக்ஷ்மி, நித்திலஅரசி
மிருதங்கம்: எஸ். சுஹிதரன்

**5-15 — 5-30 பாட்டு**

இ. குமாரிபுஷ்பா, பா. பிரதீபன்,
இ. காயத்திரி, சி. விஜிதா,
ப. அர்பனா, சி. சிவப்பிரியா,
சி. சுமங்களா, ப. வைதேகி,
சி. சுசிலா, பா. ஜெயராணி,
சு. சுபாஷினி, சு. கானப்ரியா,
ச. சுவேந்திரா, சி. சயந்தன்,
ந. அபிராமி, ச. தனுஷன்
வயலின்: வி. கௌரி
மிருதங்கம்: ரி. திருக்குமாரன்

**5-30 — 6-00 வீணை**

எம். சோமசுந்தரசர்மா
மிருதங்கம்: எஸ் துரைராஜா

**6-00 — 6-45 வயலினிசை**

வயலின்: எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்
கடம்: சதா வேல்மாறன்

**6-45 — 7-00 மங்கள விளக்கேற்றல்**

திரு. க. பாலசிங்கம் (சித்திராலயா),
திரு. து. சிவராசா (வர்த்தகர்),
திரு. இ. சற்குருநாதன் (வர்த்தகர்)

தலைவர்: இ. ராஜேஸ்வரன்
(தலைவர், நல்லூர் பல நோ. கூ. சங்கம்)

சிறப்பு விருந்தினர்: எஸ். வேலாயுதம்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

**7-00 — 8-00 இசைக்கச்சேரி**

பாட்டு: எஸ். சிவஞானசேகரம்
வயலின்: ஆர். ராதாகிருஷ்ணன்
மிருதங்கம்: எஸ். துரைராஜா
கடம்: எஸ். தபோதநாயகம்

**8-00 — 9-15 நாதஸ்வர இசை**

நாதஸ்வரம்:
என். கபிலதாஸ், ஏ. மகேந்திரன்

தவில்:
பி. கணேசன், என். கணேசன்,
வி. ராமச்சந்திரன்

வாழ்த்துகிறோம்

**நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ்**

திருநெல்வேலி மார்கட்

(எ 2861)

## பொது அறிவு போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டறக்ற் கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான நான்காவதுபொதுஅறிவுப்போட்டி தொடரிலே யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய பிரிவுகளிலிருந்து முறையே தெரிவுசெய்யப்பட்ட வேம்படி மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, புனித ஹென்றி அரசர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஹாட்லிக் கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி, புங்குடுதீவு மகா வித்தியாலயம், மண்டைதீவு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் நாளை 19ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

## இராசி பலன்

**18-02-1993**
**வியாழக்கிழமை**
**(தமிழுக்கு மாசி 7)**

துவாதசி பி. ப. 2-13 வரை பூராடம் காலை 7–51 வரை, சித்தயோகம் இராகுகாலம் பிற்பகல் 2–02 முதல் 3-32 வரை, சுபநேரம் காலை 8 02 முதல் 9-32 வரை. பிரதோஷ விரதம்.

மேஷம்: கருத்துவேறுபாடு, சுபகாரியம், புதிய முயற்சி.

இடபம்: உடல்நிலை பாதிப்பு, திடீர் பயணம், அலைச்சல்.

மிதுனம்: மன வேதனை அடுத்தவர் தொந்தரவு. பணமுடை.

கடகம்: காரிய வெற்றி. குடும்ப மகிழ்ச்சி. இனிய சந்திப்பு.

சிங்கம்: தொழில் மகிழ்ச்சி, இனசன வரவு, எதிர்பார்த்த உதவி.

கன்னி: குடும்ப மனக்கசப்பு, ஆரோக்கிய குறைவு, யோசனை,

துலாம்: மதிப்புக்குறைதல், தொழில் வெறுப்பு, அசங்சாரம்.

விருச்சிகம்: பல திட்டங்கள், நண்பர் உதவி, கடுமையான உழைப்பு.

தனுசு: தொழில் பகை, திடீர் கோபம், பயணதுன்பம்,

மகரம்: தாமத வெற்றி, தொழில் நட்டு, தவறியது கிடைத்தல்.

கும்பம்: ஏமாற்றம், பெண்வகை கலகம், கண்டிப்பு.

மீனம்: குடும்ப நன்மை, புத்திரர் பெருமை, தெய்வ வழிபாடு.

ஜோதிடர்

## பாலர் பாடசாலை ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை 7ம் கட்டை சென். ஜோன்ஸ் பாலர்பாடசாலை 10வது ஆண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக திருமதி ந. செல்லையா கலந்து கொள்வார். கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

## யாழ். ஆயர் சங்கானை விஜயம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் 200பிள்ளைகளுக்கு உறுதி பூசுதல் அருட்சாதனத்தை வழங்கவும், வலிமேற்கு இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த கத்தோலிக்க மக்களின் நலன்களை விசாரிக்கும் பொருட்டும், இம்மாதம் 21ம் திகதி ஞாயிறு காலை 6-30 மணிக்கு, யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சங்கானைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஆண்டகைக்கு எழுச்சிபூர்வமாக சங்கானை கத்தோலிக்க மக்களால் வரவேற்பு அளிக்க ஏற்பாடாகியுள்ளது. (க)


யாழ். செயலகம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம் மறியல் போராட்டத்தில் மேற்படி வட்டாரத்தில் உள்ள 510 குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கலந்து கொண்டு தமது கிராமம் இராணுவ முகாமுக்கருகாமையில் இருப்பதால் தமக்கு தொழில் இல்லை, வியாபாரம் இல்லை, விவசாயம் இல்லை. பசியால் வாடுகிறோம் என்ற கோஷங்களை எழுப்பியவாறு பல சுலோக அட்டைகளையும் தாங்கிப்பிடித்தவாறு மறியல் செய்தனர்.

இதனால் நேற்று கடமைக்கு வந்த அவ்அலுவலக உத்தியோகத்தர்களும் கிராம சேவையாளர்களும் உள்ளே செல்லமுடியாது வீதியில் நின்றனர். இவ்வேளை அவ்விடத்துக்கு வந்த சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. ஹெக்டர் யோசேப் சம்பந்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளை அழைத்து நீண்டநேரம் பேச்சுவார்த்தை நடாத்தியும் பலன் தராததினால் மக்கள் தொடர்ந்து மறியல் செய்வதைக் காணக் கூடியதாக இருந்தது (71-சி)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**சுப்பிரமணியம் நவரத்தினம் (C. S.)**

(இளைப்பாறிய இ. போ. ச. சாரதி, பருத்தித்துறை,

தோற்றம்: 02-01-1932
மறைவு: 19-01-1993

அன்பின் உருவாய் பண்பின் இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் நினைவலைகள் என்றென்றும் எங்கள் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

மனைவி மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உற்றார், உறவினர்கள்

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி,

(சி-7237)

# தமிழக அரசுக்கு எதிராக வர்த்தகர்கள் பெரும் பேரணி

(சென்னை)

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வர்த்தகர்கள் நேற்று சென்னையில் பெரும் பேரணியொன்றை நடத்தினர்கள்.

மாநில அரசாங்கம் அண்மையில் வர்த்தகர்கள் செலுத்த வேண்டிய வரியை உயர்த்தியதை ஆட்சேபித்தே இந்த பேரணி நடத்தப்பட்டது.

இதேவேளை இந்த வரி உயர்வை எதிர்த்து நேற்று மாநிலமெங்கும் சகல கடைகளும் மூடப்பட்டிருந்தன.

அண்மையில் தமிழக அரசு அரிசியின் விலையை அதிகரித்ததை எதிர்த்து மக்கள் பெரும் எதிர்ப்பு தெரிவித்து வருவதும் தெரிந்ததே. (கே – இ)

# நீரிறைக்கும் இயந்திரங்கள் 240 வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சமாசத்திற்கென 240 நீர் இறைக்கும் இயந்திரங்கள் குமண கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவை யாழ். மாவட்டத்திலுள்ள 23 ப. நோ. கூ. சங்கங்களினூடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சமாசத்திற்கென குமண மூலம் 10 தட்டச்சு இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள், கால்நடைகளுக்கான உணவுப் பொருட்கள் ஆகியனவும் எடுத்துவரப்பட்டுள்ளன. இவற்றை மக்களுக்கு உரிய முறையில் விநியோகிக்க விவசாய உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சமாசம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. [158-சி]

# அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வுக்கான விண்ணப்பமுடிவுத் திகதி 22ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அனைத்துப்பாடசாலை அதிபர்களும் குறித்த திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களை அவற்றுக்குரிய நுழைவுக் கட்டணங்களுடன் தத்தம் பிரிவுக்குரிய கோட்டக்கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஆண்டு 7 முதல் ஆண்டு 13 வரையிலான ஆறு பிரிவுகளாக நடைபெறும் இத்தேர்வில் ஒவ்வொரு பிரிவிலும் தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்குத் தங்கப் பதக்கம் உட்பட பல பெறுமதி மிக்க சிறப்புப் பரிசுகளும் கோட்ட மட்ட அடிப்படையில் மாணவர்களின் பெறுபேறுகளுக்கு அமையப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கின்றன. (சி)

## இன்று

(நல்லூர்)

இன்று காலை 9-30 மணியளவில் செயலக கேட்போர் மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் சகல திணைக்களத் தலைவர்களையும் யாழ். அரச அதிபர் சந்திக்கவுள்ளதாகவும், சகலரையும் சமூகம் கொடுக்குமடியும் கேட்டுள்ளார். (158-சி)

## மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகம் மேலும் அறிவித்துள்ளது.

இந்நடவடிக்கையில் விமானப் படையின் முழுப் பலமும் உபயோகிக்கப்படுகிறதாம். (சு – சி)

# குமாரி வந்தது தபால்பொதிகளும் வந்தன

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த குமாரியில் யாழ். மாவட்டத்திற்கென ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருட்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றுள் அரிசி 1400 மெ. தொன், மா 1300 மெ. தொன், 235 பரல் மண்ணெண்ணை ஆகியனவும், 164 தபால் பொதிகளும் அடங்கும்.

தபால் பொதிகள் நேற்றுக் காலை வந்தடைந்தபோதும் நேற்று மாலை வரை இவை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவில்லை.

யாழ். பிரதம தபாலகத்திலிருந்து தபால்களை எடுத்து வருவதற்கென நேற்று வாகனங்கள் எவையும் பருத்தித்துறைக்குச் செல்லவில்லையெனவும் தெரியவருகிறது. [158-சி]

## குமண வருகிறது

(யாழ்ப்பாணம்)

திருமலையிலிருந்து புறப்பட்ட குமண கப்பல் மீண்டும் பருத்தித்துறை துறைமுகத்துக்கு இன்று பகல் வந்தடைந்ததும் 90 நோயாளர்களை ஏற்றிக்கொண்டு மீண்டும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் செல்லும். இக் கப்பலில் தபால் பொதிகளும் ஏற்றிச் செல்லப்படுகின்றன. (56-சி)

# மரண அறிவித்தல்

## கந்தையா நாகராசா

அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் ஊரெழுவில் வசிப்பவருமாகிய அளவெட்டி மல்லாகம் ப. நோ. சங்க விற்பனையாளரான கந்தையா நாகராசா 17 – 02 – 93 புதன்கிழமை மாலை காலமானார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(ஈமைக் கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்)

தகவல் தருபவர்கள்:

அளவெட்டி – மல்லாகம் ப. நோ. கூ-சங்க

பணியாளர்களும், இயக்குநர் சபையும்

(இ-7243)

## இலங்கைப் படைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தான் அதிகமாக மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாகவும் அதன் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் பார்வை இலங்கை மீது விழுந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (கே–சி)

## தமிழக அரசை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளன.

புதுடில்லியில் தமிழகத்தில் காங்கிரஸ்-அ.தி.மு.க. உறவு முறிவு குறித்து பேச்சு நடத்திய போதே இவர் பிரதமரை சட்டசபை கலைப்பிற்கு வற்புறுத்தினராம்.

இதேவேளை இவ்வாறு தாம் எந்தகோரிக்கையும் விடவில்லை எனவும் இது குறித்து வெளியான செய்தியில் உண்மையில்லையெனவும் திரு. பாலசுப்பிரமணியம் கூறியுள்ளார். (இ)

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலமொன்றை நடாத்தவுள்ளனர்.

அண்மைக்காலமாக அரசு பத்திரிகைகளுக்கு எதிராக மேற்கொண்டுவரும் சகல அடக்குமுறைகளையும் கண்டித்து இன்றைய பேரணியில் வெளிநாட்டு, உள்நாட்டு பத்திரிகையாளர்களும், பொது அமைப்புகளும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக தெற்கில் அரசுக்கு எதிராக பலவழிகளிலும் பெரும் முறுகல்நிலை தோன்றி வருவதும் தெரிந்ததே. (சி)

## கிளாலிப் பாதை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அரச தரப்பினரிடம் பேசவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டிற்கான போக்குவரத்துக்கு உரியதாக இப்பாதை ஒன்றே இருப்பதாலும் தொடர்ந்து அரசின் விமான, மற்றும் கடற்படைத் தாக்குதல்களினால் இப்பாதை ஊடாகப் பயணம் செய்யும் பொதுமக்கள் கொல்லப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் பொதுமக்கள் சொல்லொண்ணாத் துயரங்களையும் துன்பங்களையும் அனுபவித்துவருவதாலும் இது குறித்து அரச தரப்புடன் பேச உள்ளாராம். (157 இ)

# யாழ் உணவு எடுத்துச்செல்ல மேலும் ஒரு கப்பல்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு தேவையான உணவுப் பொருட்களை ஏற்றிச்செல்ல மேலும் ஒரு கப்பலை வாடகைக்கமர்த்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட கப்பல் கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுவருகிறது.

குமண, குமாரி உட்பட ஏற்கனவே மூன்று கப்பல்கள் இச்சேவையில் அமர்த்தப்பட்டுள்ளன. (ரி)

# ★ ஆங்கிலத்தில் சித்திபெற்றோர் உள்வாரி கற்கைக்கு அனுமதிகோரலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட வெளிவாரிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுள் ஆங்கில இலக்கியத்தை ஒரு பாடமாக கற்ற ஆசிரியர்கள் மட்டும் இரண்டாம் வருடத்தில் உள்வாரியாக கற்க பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அனுமதியைக் கோரலாம்.

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வி அமைச்சுடன் இணைந்து ஆங்கிலத்துறையில் பல்கலைக் கழகத்தில் இருக்கும் இடவசதிக்கேற்ப ஒருதொகுதியினரை பல்கலைக் கழக உள்வாரி மாணவர்களாக அனுமதிப்பது வழக்கமாக இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த வெளிவாரிப் பரீட்சை முடிவுகளின் படி சித்தியடைந்தவர்கள் என பெயர் வெளியிடப்பட்டவர்கள் ஆங்கிலம் உட்பட ஆறு அலகுகளில் சித்தியடைந்து மொத்தப்புள்ளியாக 320புள்ளிகளைப் பெற்றவர்களாவர் என கலைப் பீடாதிபதி பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கென 853 பேர் விண்ணப்பித்த போதிலும் 305 பேர் மட்டுமே முழுமைச்சித்தியையும் பெற்றுள்ளனர். குறைந்த அலகுகளில் சித்தியடைந்தோர் அல்லது ஆங்கிலத்தில் சித்தியடையத் தவறியவர்கள் கால இழப்பு இல்லாமல் 2-ம் வருடப் பரீட்சைக்கு இவ்வருடம் தோற்ற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் முதலாம் வருடத்தில் சித்தியடையத் தவறிய அலகுகளில் மட்டும் இவ்வருடம் பரீட்சையில் தோற்ற சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (159-சி)

## க. பொ. த. (உ/த) பரீட்சை

(கொழும்பு)

1993 ஆகஸ்ட்டில் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்கள் பரீட்சை திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளது.

மார்ச் 31ம் திகதிவரை இவ் விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று அறிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டின் சகல அஞ்சல் நிலையங்களிலும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான கட்டணம் செலுத்தும் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (மி)

## ரூபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

9000 மெற்றிக் தொன்னில் இருந்து11000 மெற்றிக்தொன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், நேற்றிரவு 1800 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று வடபகுதி நோக்கி புறப்பட்டதாகவும் புனர்வாழ்வு அமைச்சு மேலும் தெரிவித்தது. [சு-சி]

## உணவுப் பொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகையில்:

காங்கேசன் துறைமுகத்தில் உணவுப்பொருட்களை இறக்க இணக்கம் காணப்பட்டுள்ளது. அங்கு இறக்கப்படும் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்படும். இதற்கென யாழ்-காங்கேசன் துறை வீதியில் படையினர் வைத்த கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகிறது. இது அடுத்த சில தினங்களில் பூரணமாக அகற்றப்பட்டு விடுமெனவும் கூறினர். (சி)

## கிளாலிக் கடலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

புங்குடுதீவைச் சேர்ந்த சண்முகம் (42-வயது) மற்றும் 35 வயது இளைஞர் ஒருவரையும் வேலணையைச் சேர்ந்த கே. குமார் (30 வயது என்பவரையும், காரைநகரைச் சேர்ந்த எஸ். சிவகுமார் (30 வயது) என்பவரையும் காணவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கி படகுகளில் வந்த சிலரும் படகுகளுடன் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (56-சி)

## ஒத்திவைக்க கோரிக்கை

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத்துக்கும்-கொழும்புக்கும் இடையிலான போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் 27-ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் பொது எழுதுவினைஞர் சேவையின் அதி விசேட தர போட்டிப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு யாழ். அரச அதிபர் ஊடாகப் பொது நிர்வாக, மாகாணசபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (72-இ)

## புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் இனப்பிரச்னைக்கு தீர்வு காணமுடியும் என்றார்.

மேலும்சங்குப்பிட்டி பூநகரி பாதையிலுள்ள இராணுவ முகாம் அகற்றப்படமாட்டாது எனவும் பயணிகளை படையினர் சோதனைசெய்வார்கள் எனவும் ஜனாதிபதி கூறினார். (இ)

## பிரேமாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேளனம் தீர்மானித்துள்ளது.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி கூறுகிறாரே ஒழிய எந்தவித ஆக்கபூர்வமான வேலைகளும் நடைபெற்றதாக காணோம் என்றும் அவர் காலிமாவட்டத்துக்கு வருகை தரும் பொழுது அவர் பங்குபற்றும் அனைத்து வைபவங்களையும் பகிஷ்கரிக்க வேண்டுமெனவும் மேற்படி சம்மேளனம். தெரிவித்துள்ளது.

நாட்டின் நிலைமை பற்றி பகிரங்கமாக ஜனாதிபதியுடன் பேசுவதற்கும் அனுமதி வேண்டுமென்றும் இச்சம்மேளனம் கேட்டுள்ளது.

இச்சம்மேளனத்தில் பௌத்த பிக்குகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கொம்பனிக்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, மேற்கு வீதி, 53 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Number B/10336/B